# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2407 - 2024 ඔක්තෝබර් මස 18 වැනි සිකුරාදා - 2024.10.18

*2407 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 2184 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 2184 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2183 - B 082619 - 403 (2024/10)

## மற்றைய நியமனங்களும் பிறவும்

*2024 இன் இல. 1016*

### இலங்கை நிரந்தர கடற்படை பிரிவு

அதிகாரிகளின் தரத்தை உயர்வுபடுத்துதல்

*2024, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து லெப்டினனட் தரத்திற்கு:*

உப லெப்டினனட் லத்தா ஹெட்டிகே சந்தீர அருண குமார, என்ஆர்எக்ஸ் 4546, இகப
உப லெப்டினனட் லங்ஸகார ஆரச்சிலாகே அமீன் லக்மால் லங்ஸகார, என்ஆர்எக்ஸ் 4547, இகப

*2024, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து லெப்டினனட் (பநிசெள) தரத்திற்கு:*

உப லெப்டினனட் (பநிசெள) திஸாநாயக முதியன்சேலாகே சமன்திகா சாமலீ திஸாநாயக, என்ஆர்டப் 4548, இகப

யூ. வீ. எம். பீ. பெரேரா,
ஆர்எஸ்பீ**, யூஎஸ்பீ, என்டியூ, பீஎஸ்சீ,
வயிஸ் அத்மிரால்,
கடற்படை தளபதி.

கொழும்பு,
2024, ஒற்றோபர் 01.

*10-139*

---

## அரசாங்க அறிவித்தல்கள்

பதிவுசெய்தல் ஆ 96
(ஈ2) 2/64

### கட்டிடத்தைப் பதிவுசெய்யும் சான்றிதழ்

சான்றிதழ் இலக்கம் : 1548

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் பிரிவு) 10 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் கோரிக்கைப் பிரகடனத்திற்கு அமைய விஜயசிங்க ராஜபக்ஷ ஆரச்சிகே நலின் சமன்த விஜயசிங்க ஆகிய நான் பிரசித்திபெற்ற கிரிஸ்தவ தேவாலயமாக பயன்படுத்தப்படும் பின்வரும் கட்டிடத்தை விவாகம் செய்வதற்கு ஏற்ற விதிகளின் அடிப்படையில் பதிவுசெய்துள்ளேன் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

| விபரம் | அமைவிடம் | | மாவட்டம் | சமயகுரு உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவுசெய்யப்பட்டிருப்பது எந்த சமயத்திற்காக |
|---|---|---|---|---|---|
| | கிராமம் அல்லது மற்றும் நகரப் பிரிவு | பற்று அல்லது கோரளை அல்லது மாவட்டத்தின் வேறு பிரிவு | | | |
| மடு மாதா ஆலயம் | ஸ்ரீ ராமபுரம் மகாரம்பகுளம் வவுனியா | வவுனியா | வவுனியா | சங்கைக்குரிய எம். தேவராஜன் அருள்தந்தை அவர்கள் | உரோமன் கத்தோலிக்கம் |

*2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி பத்தரமுல்லையில் கையொப்பமிடப்பட்டது.*

டப்ளியூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

*10-141/1*

பதிவுசெய்தல் ஆ 97
(எப்2) 2/64

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**
**விவாகம் செய்வதற்கு தேவாலயங்களைப் பதிவு செய்தல்**

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் பிரிவு) 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய விஜயசிங்க ராஜபக்ஷ ஆரச்சிகே நலின் சமன்த விஜயசிங்க எனும் பதிவாளர் நாயகம் ஆகிய நான் பிரசித்திபெற்ற தேவாலயமாக பயன்படுத்தப்படும் பின்வரும் கட்டிடம் விவாகம் செய்வதற்கு ஏற்ற விதிகளின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்டிருப்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

| இலக்கம் | பதிவுசெய்யும் திகதி | விபரம் | அமைவிடம் | சமயகுரு உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவுசெய்யப்பட்டிருப்பது எந்த சமயத்திற்காக |
|---|---|---|---|---|---|
| 1548 | 2024.08.26 | மடு மாதா ஆலயம் | வவுனியா | சங்கைக்குரிய எம். தேவராஜன் அருள்தந்தை அவர்கள் | உரோமன் கத்தோலிக்கம் |

டப்ளியூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2024.10.04

10-141/2